# சிலாபம் பிரதேச சபை
# புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்டோபர் 11 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சிலாபம் பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிலாபம் பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2012 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த 08 பொதுக் காணித் துண்டுகளுக்காக அவ் உறுதிகளில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 2,825,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலைமைச் செயலாளரிடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானத் தொகை ரூபா 1,275,971 குறைத்துக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 05 கணக்கு விடயங்களுக்கு உரித்தான கணக்குகளின் படியான மீதி ரூபா 155,880,845 ஆகக் காணப்பட்டதுடன் பட்டோலைகளின் படியான மீதி ரூபா 156,137,871 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேற்பட்டிருந்த செலுத்தப்பட வேண்டிய 15 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 8,915,426 ஆகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 109,290,083 கூட்டுத்தொகையான நிலுவை வருமானம் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 40,881,421 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,154,173 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,260 | 2,344 | 2,870 |
| (ii) | வாடகை | 6,176 | 6,510 | 1,086 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,104 | 3,797 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 66,212 | 7,929 | 113,831 |

### 2.2.2 வீத வரி

மீளாய்வாண்டின் இறுதியில் வீத வரி 314 அலகுகளுக்கு உரித்தான ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட நிலுவையான வீத வரி அளவு ரூபா 1,653,707 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 வாடகை

மீளாய்வாண்டின் இறுதியில் 07 வியாபார நிறுவனங்களிலிருந்து ஒரு வருட காலம் கடந்திருந்த அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 544,060 ஆகக் காணப்பட்டது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 7,018,636 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 92,422,964 |

### 2.3 விளைவற்ற பௌதீக வளங்கள்

பிரதேச சபைக்கு உரித்தான 43 – 3972 ஆம் இலக்க எல்ப் ரக லொறி 02 ஆண்டுகளுக்கு மேலான காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டன.

### 2.4 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதி மின்விளக்குகளைப் பராமரிக்கும் உபகரணம், முன் வழங்கல், பயன்பாடு மற்றும் சேமிப்பு தொடர்பான கவனத்தைச் செலுத்தி மீள வழங்கப்படும் உள்ளகக் கட்டுப்பாடு முறைப்படுத்தப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது சபைக்கு நேர்ந்திருந்த நட்டம் ரூபா 558,818 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் அத்துமீறி கூறுபடுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 13 ஏக்கர்கள் கொண்ட இரு காணிகளில் பொது வசதிகளுக்கான காணிப் பகுதிகள் மற்றும் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீதப் படியான வரித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடம் நிலவிய சபைச் செயலாளர் பதவி, 5 தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளும் 03 வருமான நிர்வாக உத்தியோகத்தர்களும் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 மூலதனச் செலவின விடயங்களுக்கு உரித்தாக 2012 வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,800,000 தொகையான ஏற்பாடு முற்றாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 02 பராமரிப்புச் செலவின விடயங்களுக்கு உரித்தான ஒதுக்கப்பட்ட ரூபா 3,500,000 தொகையான ஏற்பாட்டில் ரூபா 480,205 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 3,019,795 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) களஞ்சிய இருப்புக் கட்டுப்பாடு